# நங்கை

வனிதையரின் கவிவரியில்...

இதழ் 47



Nangai Women's Journal

2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

தலைப்பு : நங்கை - இதழ் - 47/2023

ஆசிரியர் : சரோஜா சிவச்சந்திரன் M.A

ஆசிரியர் குழு : கலாநிதி ஜெயலட்சுமி உதயகுமார் Phd
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி)
கோகிலா மகேந்திரன் முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர், எழுத்தாளர்

வெளியீடு : மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல. 07, இரத்தினம் ஒழுங்கை,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

விலை :

| உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | : ரூபா 100.00 | தனிப்பிரதி | : ரூபா 150.00 |
| ஆண்டுச் சந்தா | : ரூபா 1200.00 | ஆண்டுச் சந்தா | : ரூபா 1800.00 |
| (தபாற்செலவு உட்பட) | | (தபாற்செலவு உட்பட) | |

Title : Nangai - Issue - 47/2021

Editor : M.A Saroja Sivachandran, B.A Hons Cey, M.A.Jaf.

Editorial Board : Dr Jeyaluxmy Uthayakumar
: Kokila Makendran Writter, Former

Publishers : Centre for Woman and Development,
No.07, Ratnam Lane, Off.K.K.S. Road,
Jaffna, SriLanka.
Phone : 021 222 4398

Printed by : Theepam Printers,
717, K.K.S. Road, Jaffna.

ISSN : 1800 - 3109

ISSN : 977-180-03100-0-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

18 MAR 2023
மாநகரசபை
யாழ்ப்பாணம்

# பொருளடக்கம்

01. முன்னுரை ..... iii
02. பெண்ணே பெரும் சக்தி ..... 01
03. யாதுமாகியவள் ..... 03
04. அறிவால் வெல்லும் அணங்கு நீ ..... 05
05. வனநீலி ..... 07
06. ரௌத்திரம் பழகு ..... 08
07. பெண்ணியம் ..... 09
08. பெண்களே நமது கண்கள் ..... 10
09. பெண் ..... 12
10. பெண் எனும் நெருப்பு ..... 13
11. நாளைய விடியலை நம் வசமாக்கு ..... 14
12. தடைகளை உடைத்தெறி ..... 16
13. நான் கறுப்பி ..... 17
14. துன்பம் களைவோம் ..... 18
15. கும்மிப்பாடல் ..... 19
16. பெண்ணே எம் கண்ணே ..... 20
17. மண்ணில் மகளிரின் மாண்பு ..... 21
18. வீறு கொண்டெழுந்திடு ..... 23
19. பெண்ணே உன்னால் முடியும் ..... 25
20. பின்தொடர்வீர் பெண்களே ..... 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. சவால்கள் தானே சந்தித்து விடலாம்........................ 28
22. சுமையெல்லாம் தாங்குபவள்........................ 29
23. பாதி(வி)யும் மாறல........................ 30
24. விழித்தெழு பெண்ணே........................ 31
25. இன்னலை இரசி........................ 32
26. பெண் எனும் குத்து விளக்கு........................ 33
27. அர்த்தம் கொள்ள முடியா ஆழம்........................ 34
28. பெண்ணின் சாதனைகள்........................ 35
29. பெண்ணின் சுதந்திரம்........................ 36
30. விடியல்........................ 37
31. பெண்........................ 39
32. பெண்ணே துணிந்திடு........................ 41
33. விழுந்தது போதும் எழுந்து வா........................ 42
34. மகளிர் தினம்........................ 43
35. அவள்........................ 45
36. மங்கயரைப் போற்றுவோம்........................ 46
37. விழித்தெழு பெண்ணே........................ 47
38. வென்றதா பெண்ணியம்........................ 48
39. ஆளுமையின் பிறப்பிடம்........................ 49
40. விடியலை நோக்கி........................ 50
41. பெண்மொழி கேள்........................ 51
42. பெண்கள் நம் கண்கள்........................ 52
43. முதுமை பார்த்து முகம் சுளிக்காதே........................ 54
44. விடியலைத் தேடி வீறுகொண்டெழு........................ 56
45. துணிந்திடு பெண்ணே துயரம் அகலும்........................ 57
46. சமூக செயற்பாடுகளின் தொகுப்பு........................ 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சங்ககால இலக்கியங்கள் பெண்களின் ஆளுமையை நிலை நிறுத்தி அவர்களின் உள்ளார்ந்த வளங்களை உலகிற்கு எடுத்துக் காட்டுவனவாக அமைந்தன. பெண்ணியத்தின் வளர்ச்சி அண்மையதாக இருந்த போதிலும் அதன் அசுர வளர்ச்சி அவள் ஆணுக்குச் சமமானவள் என்னும் உயர் நெறியை நிலைநாட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு இயங்குகின்றது.

பெண்ணியத்தின் அணுகுமுறையும் தீவிரமான போக்கும் உலக நாடுகளில் பெண்களைப் பல்வேறு மட்டங்களில் உள்வாங்கி நேர்மையான சமத்துவத்தை சமுதாயத்தில் ஏற்படுத்துவதில் கவனமாகப் பயணிக்கின்ற ஓர் இயக்கமாக வளர்ச்சி பெற்று வருகின்றது. பெண்கள் எழுச்சியை முன்வைத்து தொடங்கப்பட்ட இவ்வியக்கம் இன்று ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதில் கவனம் செலுத்துகின்றது.

இன்று பெண்களைப் புறந்தள்ளி எத்துறையையும் செம்மையாக்க முடியாது. எமது நாட்டிலும் பெண்கள் இல்லாத அரசியல் தடம் புரள்வதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆணோ, கணவனோ அநீதி என்றால் அறம் தவறினால் அடங்காதே, அவனை எதிர்த்துப் போராடு என்பதைப் போதித்து வழிகாட்டியவையே தமிழ் இலக்கியங்கள். பெண்களின் ஆளுமையை அடகு வைத்து அவர்களை முடக்கிவிடும் சக்திகளும் எமது சமூகத்தில் இல்லாமலில்லை. பெண்களுக்கு எதிரான வன்முறையை புடம்போட்டுக் காட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தேசிய செயற்திட்டம் மற்றும் கொள்கை வகுப்புத் திட்டங்கள் யாவும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை மேலோட்டமாகக் காட்டுபவையாகவே உள்ளன.

இவற்றின் தாக்கங்களை ஆழமாக ஆராய்ந்து பார்ப்பின் வன்முறைகட்கு அத்திவாரமாக பெண்கள் ஆண்களுக்கு இடையில் நிலவும் சமமற்ற அதிகாரத் தொடர்புகளே முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இக்கட்டமைப்புகளை வரையறை செய்வது எப்படி?

வரையறைகளின் படிமங்கள் ஒவ்வோர் அதிகார வர்க்கத்திடமும். வேறுபட்டவை, வன்முறைகளும் வேறுபட்டவை. இவற்றை நாம் என்றுமே ஒருமுகப்படுத்த முடியாது. வீட்டு வன்முறைகளை ஒழிப்பதற்கு வீதியில் போராடியும் பயனில்லை. அதிகாரத்தை அதிகாரத்தினாலேயே பெறமுடியும். பெண்கள் அதிகாரவர்க்கப் பிடியிலிருந்து விடுபட்டு அதிகாரத்தை சமத்துவமான முறையில் தாமும் பெற்றுக் கொள்தற்காக முயல வேண்டியது கட்டாய தேவையாகும். அதற்காகப் பாடுபட வேண்டும்.

ஆண்டாண்டு காலமாகப் பெண்களைப் புகழ்ந்து கொண்டாடியது எம் சமூகமே. நம் சமுதாயம் பேரோடும் புகழோடும், வாழ்வதற்கும், நிலைத்திருப்பதற்கும் காரணம் நாம் பெண்களைக் கொண்டாடியதுதான். பெண்கள் சமூகத்தின் ஆணிவேர். அவர்களை என்றும் கொண்டாடுவோம்.

**சரோஜா சிவசந்திரன்**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணே பெரும் சக்தி

இறைவனின் படைப்பும் நீயே!
இயற்கையின் வடிவம் நீயே!
மறையினைப் போற்றும் பெண்ணே
மலரினை ஒத்த கண்ணே!
நிறைமதி போல மண்ணில்
நீடுநீ வாழ வேண்டும்!
துறை பல கற்று மேன்மைத்
தொண்டுகள் செய்ய வேண்டும்!

தந்தையின் மகளாய் நல்ல
தாயவள் அன்புச் சேயாய்
சொந்தமே பலமாய் என்றும்
சூழ்ந்திடு நன்றே!
நாளும் பந்தமாய்ப்பாசம் கூட்டிப்
பலகிளை பரப்பி வாழ
எந்தையர் வழியில் சென்றே
இனிமையாய் வாழ்வாய் பெண்ணே!




படைப்பினில் பிரம்மா நீயே
கொடையினில் கர்ணன் நீயே
கோதையாண்டாளும் நீயே
தடையது வந்த போதும்
தகர்த்திடும் பார்த்தன் நீயே
கடையினில் ஆளும் சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகபூரணியும் நீயே!
அன்னையாய் பாட்டி பூட்டி
அழகான மனைவி மாமி
இன்புற மகளாய் நல்ல
இணையில்லாத் தோழியாய்
வண்ணமாய் பெண்கள் வாழ்வில்
வலம்வர மகிழ்ச்சி அன்றோ
என்னென்று சொல்வேன் நானும்
ஏந்திழை உறவின் மாட்சி
பட்டமே பெறுவார் நல்ல
பதவிகள் வகிப்பர் வல்ல





சட்டமே செய்வார் மேன்மைச்
சரித்திரம் படைப்பார் உற்ற
திட்டமே வகுப்பார் நாட்டைத்
திகழவே செய்வார் பாரின்
எட்டிடும் திசைகள் எல்லாம்
எழிமுற வைப்பார் பெண்கள்

அறவழி நிற்பாய்! இந்த
அகிலமே போற்றுமாறு!
திறமைகள் பெற்று வாழ்வில்
திக்குகள் எட்டும் ஆள்வாய்!
சிறப்புறம் வண்ணம் ஓங்கு சீரிய
சேவை செய்வாய்!
மறத்தமிழ் பெண்ணே பாரில்
மாண்புடன் வாழ்க!வாழ்க!

முல்லை நாச்சியார்
டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாதுமாகியவள்!

காய் காய் காய் மா
காய்காய்காய் மா
படைத்தவனே வியக்கின்ற பாரதனின் மேன்மை
பரவசமே சுரக்கின்ற பவித்திரமாம் பெண்மை!
நடைமுறையில் காண்பதெல்லாம் நலிவாக்கும் வன்மை
நாளெல்லாம் தருவதுவோ நவமான தன்மை!
முடைகளிடை முகிழ்த்திடுவாள் முப்போதும் தண்மை
முழுநிலவாய் உலகினிக்கே வரமான உண்மை!
விடையின்றித் தொடர்கின்ற வியப்பாகும் நன்மை
விலையற்ற பெருநிதியாய் எங்கனுமே பெண்மை!

தாயாகித் தாங்குகின்ற தரணியதன் இறைவி
தங்கரதம் என்றாகித் தடம்பதிப்பாள் மங்கை!
ஓயாத பம்பரமாய் உருள்கின்ற இல்லாள்
ஓங்கிய கோபுரமாய் ஆக்கிடுவாள் இல்லம்!
சேயாகிப் பொழிகின்றாள் செல்வமதை மகளாய்
செழிப்பான தோப்பாவாள் சந்ததிக்கே காப்பாய்!
தேயாத வெண்நிலவாய்த் தருகின்றாள் ஒளியைத்
தேசத்தின் கடமையிலும் காக்கின்றாள் எல்லை!

மானாக மயிலாக மடக்கினோர் மதியை
மாற்றிட்டே புதுப்புனலாய் அணைக்கின்றாள் உலகை
தேனாகப் பொழிகின்றாள் தெவிட்டாத அன்பைத்
தென்றலாகி அணைக்கின்றாள் எப்போதும் உறவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானாக உயர்ந்திடவே வாரிடுவாள் உழைப்பை
வனப்பாக இயக்குகிறாள் வாழ்வெனும் தோப்பை!
கூனாது குலங்காக்கும் கோபுரத்துக் கலசம்
குணங்கெட்டோர் கைகளிலே காண்கிறாள் துன்பம்!

வல்லமையின் வழிகண்டே வரைகின்றாள் காட்சி
வானென்ன மண்ணென்ன புரிகின்றாள் ஆட்சி!
தொல்லைகளைத் தூரமாக்கி தொடுகின்றாள் சிகரம்
தொடர்கின்ற பாதையெல்லாம் உருவாகும் மாற்றம்!
சொல்லுக்குள் அடங்காத சுந்தரமாய்த் தீர்க்கம்
சொரிகின்றாள் நாளெல்லாம் குறையாத பாசம்!
முல்லையென முகிழ்கின்றாள் முப்போதும் ஆற்றல்
முடிவிலியாய் நிறைகின்றாள் யாதுமாகி அவளே!

**கீத்தா பரமானந்தன்,**
**ஜேர்மனி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவால் வெல்லும் அணங்கு – நீ

அன்பின் அடையாளமே
ஆளுமையின் பின்புலமே
அறிவால் வெல்லும்
அகிலத்தின் அணங்கு–நீ

அடுப்படியில் அடிவைத்து
அன்றிரவு உறங்கும்வரை
தேவைகள் அறிந்தே
சேவைகள் செய்பவள்–நீ

இல்லற நிம்மதியை
இதயத் துடிப்பாக்கியவள் நீ
வரமாய் வந்த
வாழ்வின் வழிகாட்டி

பெண்ணே ஆணின்பாதியல்ல
ஆணுக்கே ஆதி–நீ
ஒதுக்கப்படும் நேரத்திலும்
ஓங்கியெழும் உன்வீரம்

ஊக்கத்தைத் தந்தே
ஊன்றுகோலாய் இருப்பவள்
சாதிக்க வேண்டிச்
சபதங்கள் செய்திடுவாள்



மோதி மிதித்திடுவாள்
மூடப் பழக்கங்களை
தவறுகளைத் தட்டிக்கேட்டே
தண்டனை விதித்திடுவாள்

பேரண்டத்தையும் காக்கப்
பேரவதாரம் எடுத்தவளே
வெளியுலகம் அறியாது
வெந்தது போதும்–பெண்ணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவை ஆயுதமாக்கி
ஆகாயத்தில் மிதப்பவளே
சிறகை விரித்தே
சிறகை உடைப்பாய்-சிறியவளே!

அரசியல் தொடக்கம்
ஆட்சிபீடம் வரையும்
சூழ்நிலைக்குத் தக்கபடி
சுற்றிச் சுழல்பவளே....!

வீரமறத்தியர் விதைத்ததும்
விளைந்ததுமான வீரமண்ணில்
அடங்கிக் கிடந்தே
அழுததுபோதும் துணிந்திடு...!

வீரத்தில் வேலுநாச்சி
வெற்றியின் இந்திரா
கருணையில் திரேசா
கம்பீரத்தில் ஜான்சிராணி

கட்டளையில் ஜெயலலிதா
விளையாட்டில் உஷா
சாதனையில் குயிலி
சரித்திரத்தில் மங்கம்மாவென

சாதித்து நிமிர்ந்து
சரித்திரத்தில் கால்பதித்தோர்
வரலாறு புரட்டிப்பார்-வஞ்சியே
வாழ்க்கை வனப்பாகும்....! நீ



சுதந்திரப் பறவையாய்
தடைகளை அகற்றியே
தரணியில் தயங்காது
தடம்பதிப்பாய் தாரகையே

விடிவெள்ளியாய் மிளிர்வாய்
விடியலும் வசமாகும்
துணிந்திடு பெண்ணரசே
துயரம் அகன்றிடுமே!

**ஜெயா உதயா**
**கல்வியங்காடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வனநீலி

அவள் வானத்தின்
அரசியாகவிருந்தாள்
சூழ்ந்திருந்த உயிரினமெல்லாம்
அவள் குரல் கேட்டு காலடியில்
இறங்கின வானம் அவள் குரலிற்
சுரந்தது வெயிலை ஒரு திரைச்
சீலையெனச் சுருட்டி
மரங்கள் மேல் காயப்போட்டாள்
வசந்த காலத்தில்
பூக்கள் அவள் மீது மாலையாயின
அவள் சொல்லிற்கு அடங்கிற்று
இயற்கை ஒருநாள்
உறக்கத்திலிருந்து
விழித்த போது
ஒரு வேடுவச் சிறுமி ஆகியிருந்தாள்
அவள் உடலிலிருந்த அணிகள்
மறைந்திருந்தன
சூழவிருந்த மரங்கள்
சில காணாமல் போயிருந்தன
வெயில் அவள் மீது தேமலெனப்
படிந்தது அவளுடைய மந்திரக்
கோலினை யாரோ களவாடிப்



போயிருந்தார்கள்
பூக்களைச் சூடியவள் கிளைகளை
உதிர்க்கையில்
காற்றுத் திசை மாறியது
குடையப்பட்ட மலையையும்
வீழ்ந்து கிடந்த மரங்களையும்
ஒரு பார்வை பார்த்த பின்
தலைவிரி கோலமாய் எழுந்தாள்
அவள் நீலியான கதை இவ்வாறு

**தாட்சாயினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரௌத்திரம் பழகு

அழகை வர்ணித்தால் அகமகிழ்ந்து
போகாதே! பழகிய நபரானாலும்
பசப்புவார் நம்பாதே

தனியே அழைத்தால் தவறெனவே
உணர்ந்திடு இனிமேலும் தொடராமல்
எச்சரிக்கை செய்திடு

தொடுகை வேண்டாமெனத்
தொலைவில் நிறுத்து

சடுதியில் உதவிக்குச் சத்தமிட்டு
அழைத்திடு

பல்லைக் காட்டினால் பட்டென்று
முறைத்திடு

தொல்லைகள் தந்தால் துணிந்து
எதிர்த்திடு

தற்காப்புக் கலைகளைத் தயக்கமின்றிப்
பயின்று

தற்காலத் துச்சாதனர்களைத்
தடையின்றி மிதித்திடு

மகளின் வயதுடைய மங்கையைத்
தீண்டினால்

நகமெனும் ஆயுதத்தால் நங்கூரம்
பாய்ச்சிடு! அல்லாத செய்கைகள்
அடுக்காமல் செய்தால்

பல்லெனும் ரம்பத்தால் பதற வைத்திடு

குருவாக இருக்கும் குறுக்குப்
புத்திக்காரனை குரல்வளை நெரிக்கவே



கொஞ்சமும் தயங்காதே உறவென்று கூறி
உரிமையாய் தடவினால்

உற்றாரிடம் உடனே உள்ளதைச்
சொல்லிடு அலைபேசிப் படத்தை ஆதாரம்
காட்டினாலும்

நிலை குலையாமல் நிமிர்ந்து நின்றிடு

அழுது புலம்பாதே அரசாங்கம்
துணையுண்டு! கழுதைகள் ஓர்நாள்
கழுவேறும் துவளாதே

மாட்சிமைப் போர்வையில் மாண்பை
மீறினால் ராட்சசி ஆகிடு ரௌத்திரம்
பழகிடு இலவச சேவையெண் இன்னல்
தீர்க்குமே பலநாள் திருடர்களின்
பகல்வேடம் கலையுமே

கவிஞர்
கவிதா இராமச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணியம்



பெண்ணின் அடிமை நிலையைப்
பிடுங்கி எடுத்துத் தகர்த்திடவும்
கண்ணாய் அவளை என்றும்
கனிவு கொண்டு காத்திடவும்....
வண்ணமான வாழ்வை
வரமாய் கொடுத்து மகிழ்ந்திடவும்
மண்ணில் வந்த கொள்கை
மனிதம் போற்றும் பெண்ணியமே
கடமையுணர்வில் உலவிக்
கருணை மிகுந்த தூயவளை
அடக்கி ஆட்சி செய்தே அவனி
நிறைந்த ஆதிக்கம்
மடமை தன்னை விதைத்து
மங்கை வாழ்வை அழிப்பதுவோ
திடமாய் உறுதி தந்து துணிவை
நல்கும் பெண்ணியமே
ஆய்வுப்பொருளாய் அவளை
ஆழ ஆய்ந்தறிந்திடுமே
தேய்வு நிலைகளை நீக்கி
தென்றலாய் வீசசெய்திடுமே
ஓய்வே இல்லா நிலையில்
ஓங்கும் அவளின் பணியினையே
பாய்ந்தே கொல்லும் சொல்லால்
பரப்பி நிற்கும் பெண்ணியமே.....

உடுவிலூர்கலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களே நமது கண்கள்



மங்கையராய் பிறப்பதற்கே
மாதவம் செய்திடவேண்டுமம்மா!

கருவறை முதலாய் கல்லறை முடிய!
வலிகள் சுமந்து
நல்வழி காட்டிடும் நங்கையும் அவளே!

பிறந்தவீட்டிற்கு
பெருமைசேர்க்கும்
புகுந்த வீட்டின்
பொக்கிஷமவள்!

தாயாய்!சேயாய்!
சகோதரியாய்!
சமத்துவமான
தெய்வமவள்!

இமைக்காத விழியோடு
இமயமும் தொட்டிடுவாள்!
கண்ணிலே கவலையை
கண்ணீரால் திரையிடுவாள்!

மண்ணிலே நாம் காணும்
மகத்தான சக்தியவள்!
கணவனே தெய்வமென்பாள்
வீடே கோவிலென்பாள்!

தனக்கென்று ஆசைகளில்லா
தன்னிகரற்ற சக்தியவள்!
அடுப்பூதும் பெண்ணென்றாலும்
அகிலம் சமைத்திடுவாள்!

சோதனைகள் தந்திடும்
சூழ்ச்சி உலகினிலே!
சாதனைகள் நிகழ்த்தியே
சரித்திரம் படைத்திடுவாள்!

பூச்சூடும் கரங்களால்
பூமிப்பந்தையும் புரட்டிடுவாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்தில் உறுதிகொண்டு
பீடுநடை போட்டிடுவாள்!
மண்ணிலே போராடி
பூமிமுட்டும் விதைபோல!
தன்னையே செதுக்கிடும்
உளியாக உருவெடுப்பாள்!
சாதிக்க வைத்து
சரித்திரம் படைக்கும்
சமத்துவம் கொண்டவள்!

அன்னை தெரசாவாய்!
இராணிலெட்சுமிபாயாய்!
தில்லையாடி வள்ளியம்மையாய்!
ராமனின் சீதையாய்!
கையில் சிலம்பேந்திய
கண்ணகியாய்!

பெண்ணென்பவள் பேராற்றல்
கொண்டவள்!
அகிலமும் அவளுள்ளே
அடக்கம்!

பெண்ணே பிரபஞ்சம்!
பெண்ணே வெற்றி!
பெண்ணே முயற்சி!
பெண்ணே தொடக்கம்!
பெண்ணே பெருமை!
தொடர்ந்திடும் தொலைவவள்!

விதவிதமாய் ஆடையை
வீதியிலே வாங்கி!
பிள்ளைக்கு உடுத்திடுவாள்!
கிழிந்த மேலாடையை
கீர்த்தியாய் நெய்தே
தன் மானம் காத்திடுவாள்!

கல்லானாலும் கணவனென்பாள்!
ஆம்!கல்லாய் இருக்கின்ற
கணவனை அன்பெனும்
உளியால் அறிவோடு செதுக்கிடுவாள்!

பாதங்கள் தேய்ந்திடினும்
பாதைகள் மாறாது!
வெற்றிப்படி ஏறியே
வேள்விகள் செய்திடுவாள்!

தேன்தமிழை அன்னையென்கிறோம்!
நமைதாங்கும் பூமியை
தேவியென்கிறோம்!
காவிரித்தாயென்றோம்!
கங்காதேவியென்றோம்!

ஆம்!பெண்களே
நமது கண்கள்!

ஆவதும் பெண்ணாலே!
அழிவதும் பெண்ணாலே!

நல்லவைகள் ஆக்கப்படுவதும்
பெண்ணாலே!
தீயவைகள் அழிக்கப்படுவதும்
பெண்ணாலே!

இரா.இராதைகண்ணன்
M.Sc.B.Ed.,M.Phil.,P.G.D.C.A.,
B.T.,Asst.,(Maths)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்

அன்பின் திருவுருவாய்ப் பண்பின்
விளைநிலமாய்
அன்னையாய் அக்காவாய்த்
தங்கையாய்த் தோழியாய்
மனைவியாய் மகளாய் மதிப்புறு
ஆசிரியையாய்
அனைத்து உறவாய் அணைக்கும்
அணங்காய்
திங்களின் அழகாய்த் திகழ்பவள்
பெண்ணே!

முப்பெரும் தேவியராய்
மும்மூர்த்திகளின் துணைவியராய்
காக்கும் கொற்றவையாய் கனல்கக்கும்
காளியாய்
அன்பர்க்கு அருள்கின்றாய் அகிலாண்ட
நாயகியாய்
கவினுறு காதலியாய் கண்ணனின்
ராதையாய்
இதிகாசம் பேசுகின்ற இறைவிநீ
பெண்ணே!

கலைகளுக்கு முதன்மையாய் காலத்தை
வென்றவளாய்
அழகான ஓவியமாய் அனைவரையும்
ஈர்க்கின்றாய்
உளியின் உயர்விற்காய் உயிர்கொடுக்கும்
கற்சிலையாய்
திருவின் வடிவாய் திருவிளக்கின்
ஒளியாய்
உலகம் வியக்கின்ற உத்தமப் பெண்ணே!

பொன்னி ஆறாய் பொருள்தரும்
கதையாய்
கங்கா ஜமுனாவாய் சரஸ்வதி பவானியாய்
கடல் அன்னையாய் கடவுளின் உருவாய்
பூமித் தாயாய்ப் பொறுமையின் சிகரமாய்
இயற்கையின் எழிலாய் இருப்பவள்
பெண்ணே!

ஔவையின் வடிவாய் ஆத்தி சூடியாய்
அமுதான தமிழாய் அகத்தினை
ஆளுகின்றாய்
இனத்தின் கனவாய் இன்னல்கள் ஏற்றாய்
ரவுத்திரம் கொண்டாய் பாரதி வழியாய்
பவித்திரம் ஆன புதுமைப் பெண்ணே!

வட அல்வையூர்
அனுஷா செல்வரட்னம் (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் எனும் நெருப்பு

பெண்ணே நீயொரு
அக்கினிக் குஞ்சு

உந்தன் சக்தி
உணர்ந்து கொள்வாய்

அடிமைத் தளையில்
அடங்கி நிற்காமல்

வீறுகொண்டு எழுந்து
விண்ணையும் சாடுவாய்

நெருப்பாக நிற்கும்
நிலையறிந்து கொள்வாய்

தருணம் உணர்ந்து
தாக்கி அழிப்பாய்

கண்ணின் எதிரில் பெண்ணை அழிக்கும்
கயவரைக் கண்டால் நெருப்பெனநில்
மண்ணில் வாழும் மக்கள் உருவில்
மாக்களைக் கண்டால் நெருப்பெனநில்

எண்ணில் அடங்கா
குற்றம் செய்யும்
எதிரிகள் கண்டால் நெருப்பெனநில்

உண்ணும் உணவைப்
பறிப்பவர் கண்டால்



உடனடிதந்திடும்
நெருப்பெனநில்

பெண்சிசுக் கொலையை
கண்ணெதிர் கண்டால்

பெரு நெருப்பாகி
எரித்திடு அவரை

நெருப்பின் தழலை
அணைத்து விடாமல்

நெஞ்சில் என்றும்
வைத்திரு பெண்ணே.

பிரேமா ரமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாளைய விடியலை நம் வசமாக்கு

சிந்தனைச் சிறகினைச்
சீராய் விரித்து
அடிமைத் தளையினை
அடியோடு தகர்த்திடு
அடங்கிக் கிடந்தது
அணங்கே போதும்
அடக்குமுறைக்கு எதிராக
ஆர்ப்பரித்து எழுந்திடு

சிந்திந்துப் பார்பெண்ணே
சிந்திய கண்ணீர்த் துளிகளை
தன்சுகம் கருதாத
தரணியின் தாரகைநீ

மண்ணில் அவதரித்த
மாசற்ற குலவிளக்கே
சிலப்பதிகாரத்தில் சிறப்பே
சீற்றங்கொண்ட பெண்ணியற்குரலே
உண்மையை உரைத்த
உயரிய பெண்ணியற்சிந்தனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரத்தில் இடம்பிடித்து
சாதனை படைத்ததே
ஆண்மையின் ஆதிக்கத்தை
அசையும் விழியால்
அடிபணியச் செய்யும்
அற்புதப் படைப்புநீ

தேவதையாய் தெரிபவள்
தெருவிற்கு வீசப்பட்டு
முன்னேற்றப் பாதையினை
முடக்குதல் முறைகேடே

மென்மையுடன் மேன்மையும்
மேலானஎண்ணமுடன் மேதினியில்
கொண்டவன் குறிப்பறிந்து
கோணாமல் நடப்பதுவும்

ஆதிக்கம் செலுத்தாது
அடங்கிப் போவதுமாய்–இருந்தும்
எட்டியுதை வேண்டியதன்றி
என்னபலன் கண்டாய்!
ஆண்டவனின் மேலான
ஆற்றல் உனக்குண்டு
அறிவை ஆயுதமாய் அறநெறி பற்றிடு



வீணர்களின் விமர்சனத்தால்
விரக்தியுடன் புலம்பாது
சரித்திரத்தைத் திரும்பிப்பார்
சாதனைகள் தெரியவரும்

புதைந்துபோன பூவையர்
சரித்திரத்தைப் புடம்போடு
நம்பிக்கையோடு நடமாடு
நாளைவிடியல் நம்வசமாக்கும்

திருமதி மகேஸ்வரி பரமேஸ்வரன்
கூசைப்பிள்ளையார் வீதி
புலோலி தெற்கு
பருத்தித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தடைகளை உடைத்தெறி

ஏட்டிலும் பாட்டிலுமே
எல்லாரும் அடங்கிவிட்டால்
வீட்டிலும் நாட்டிலும் வாழவென்று
வேண்டாமா
காட்டிடும் கருணையில் கடுகளவும்
உருகிடாமல்
பூட்டிய விலங்கதனைப் பூமாலையாக
மாற்றிடவா?

ஆணென்ன பெண்ணென்ன
ஆண்டவன் படைப்பிலே
சாணென்ன முழமென்ன சாதித்துக்
காட்டிட வேண்டாமா?
வீண்வாதம் பேசுகின்ற வீணர்களின்
செயல் கண்டு
நாணிக் குனிந்திட்டால்
நல்வாழ்வு மலர்ந்திடுமா?

பாசத்தின் வலைதனிலே
படுத்தது போதுமினி
தேசத்தில் தடம் பதிப்போம் தெளிவோடு
முன்னேறி வா உழைப்பில்
உறுதியானால் உலகினைப்
போற்றிடவும்பிழைகூறிய
நாவெல்லாம் பின்தள்ளியே
ஓடட்டும் வா!

அடிமையான வாழ்க்கையினை
அகற்றிடவே வேண்டும்
துடிப்புடன் எழுந்திட்டால் துப்புரவு
செய்திடலாம்
துடைகளை உடைத்தெறி
வானத்துத் தாரகையே
தடம் புரண்ட எல்லாமே
தானாகவே குறையலாம்!
விடிவெள்ளி நீயானால்
வெளிச்சமது பிறந்திடும்
வருங்காலம் உனக்காக
வாயிற்கதவைத் திறந்திடும்
கற்ற கல்வியினால் காசினியை
உயர்த்திட நிமிர்ந்த நடைபோட்டால்
நிகரேது உனக்கிங்கு!!

**இவள் இயற்கை விரும்பி**
**அ. வள்ளிபாபு**
**நெய்வேலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் கறுப்பி

நான் கறுப்பி

கறுப்பு என் நிறம் மட்டுமல்ல

அது என் உரம்

என் திறம்

என் வலி

உன் அழகியல் தோற்றுப்போன

சுழி நான் என் கறுப்பு

என் கம்பீரத்தின் அடையாளம்

வெள்ளை எலிகளும்

வெள்ளைப் பன்றிகளும்

உலாவரும் உன்தேசத்தில்

பச்சையமாய் உயிர்த்திருக்கும்

மழைத்துளியின் கருவறை கறுப்பி

உன் கற்பனைக்கு எட்டாத வானம்

உன் கவிதைகள் தொடாத காதலி

வெணமை புனிதம்

கருமை இருமையென

எவன் சொன்னான்?

ஏன் சொன்னான்?

போடா போ

ஆத்தாவும் அப்பனும் கறுப்பாக இருப்பதை

வெளியில் சொல்லாதே

ஃபேர் அண்ட் லவ்லி தேவதைகளை

கண்டுபிடி

பசுவின் பால் மட்டுமே

வெள்ளையாக்கும்

எருமைப்பால் கறுப்பாக இருக்கும் நம்பு.

சொர்க்கலோகத்தில் சிவப்பிகளுடன்

ஆடிப்பாடு.

உன் பிறவிப்பயன் கிட்டும்!

தாகமெடுக்கும்போது தண்ணீர்

குடிக்காதே!

கார்மேக நீர்த்துளி.....

கறுப்பின் அடையாளம் வேண்டாம்....

சிவப்பு வெள்ளையின் மூத்திரம் குடி.

போடா போ...

நான் கறுப்பி....

கறுப்பு என் நிறம் மட்டுமல்ல.....!

**புதிய மாதவி,**

**மும்பை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துன்பம் களைவோம்

எழுந்திடு தோழா இமயம் நமதே
பகிர்ந்திடு தூணாய்
பாசங் கொண்டே

அந்நிய மொழிமேல் மோகம் வேண்டா
தாய்தமிழ் இருக்கக் கவலை எதற்கு

விளைச்சலை மறந்தால் விதையினை இழப்பாய்
விருட்சம் இன்றி சுவாசக் கோளாறில்

மூச்சும் முட்ட மரணம் காண்பாய்
தூய்மை காற்றாய் வாசம் செய்திடு
வெட்டத் துணிவாய் வெட்டிப் பேச்சு



சட்டம் பயில்வாய் சரித்திரம் உணர்வாய்
எட்டும் கனியாம் ஏட்டின் வாசிப்பு
மட்டம் தட்டாது மடியை துரத்து

ஓங்கும் புகழும் உனைவந்து சேரும்
தாங்கும் உறவாய் தரணியின் சிறப்பாய்

தந்தைதாய் பேணல் சந்ததி வாழும்
சிந்தை தெளிவுகொள் சிறக்கும் வாழ்வே
துன்பம் களைய துடித்திடும் பொழுது
வன்மம் விடுத்திடு வாழ்க்கை மலருமே

துயரில் துடிக்காதே துணிவைத் தூணாக்கு
துன்பம் விலகி இன்பம் பெறுகுமே

கவித்தேனி.க.மகராசி
கால்க்கரை
திருநெல்வேலி மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கும்மியடி பெண்ணே கும்மியடி

## (கும்மிப்பாடல்)

நெஞ்சத்துள் ஆர்வமும்
கொண்டிடுவோம் – வாழும்
நெற்றிகள் எல்லாமும் கற்றிடுவோம்!
கொஞ்சமும் அச்சமே
இல்லாமலே – நாமும் கூடியே
நன்றாய்க் கற்றிடுவோம்!

பாதகம் பார்த்தாலே சீறிடுவோம்
நல்ல பாதையில் நாமும் சென்றிடுவோம்
வேதமாய் அன்பைக் கொண்டிடுவோம்
வாழ்வில் வெற்றிசிறக்கவேசய்தடுவோம்!

பெற்றோரை மதித்து
நின்றிடுவோம் பெரும்
பேர்புகழ் வாங்கியே தந்திடுவோம்!
கற்றோர்கள் போற்றிட
வாழ்ந்திடவே வல்ல கல்வியைத்
துணையாய்க் கொண்டிடுவோம்!

பெண்களை மதித்து மாண்புறுவோம்
பெண் பிள்ளைக் காமுகரை
ஓட்டிடுவோம்!
கண்களாய்ப் போற்றியே
காத்திடுவோம் வாழும் காலம்
எல்லாமும் களித்திடுவோம்

தீய பழக்கத்தை விட்டொழிப்போம்
நல்ல திண்மையுடையோராய்
நின்றிடுவோம்
மாயவலைதனில் வீழாமலே நாளும்
மாட்சிமை
பெற்றே உயர்ந்திடுவோம்!

குளோரிசக்தி
கரூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணே எம் கண்ணே

வாருங்கடி ஒன்றாய்ச் சேருங்கடி-
பெண்கள்

வாழ்வு மலர்ந்திடப் பாடுங்கடி ஆடுங்கடி!

பார் புகழ் பத்தினிப் பெண்களடி
கண்களடி!-அவள்

பாதத் போற்றிக் கொண்டாடுங்கடி!

வீட்டுக்குள்ளே பெண்ணை
பூட்டிவைத்தார் என்ற வேதனை
தீர்ந்திட பாடுங்கள் ஆடுங்கள்!

வாட்டமல்லா மலர்ப். பெண்களடி-
அவள்!

வான்புகழ் வாழ்வினல் கண்களடி
திங்களடி

சிந்திய கண்ணீரைத் துடைத்திடுவாள்
பய!

சிந்தை அகன்றிடச் செய்திடுவாள்!

வந்த கவலை அகன்றிடவே-அவள்!

வஞ்சனை இன்றி வகை மொழிவாள்!

பட்டத்திற்கே இங்கு பெறுமதியாம்-
அதனால்

தட்டத்தில் சீதனம் வெகுமதியாம்!

துட்டுக்கு வாங்கிய அவனுக்கும்
எருதுக்கும்!

மட்டற்ற சீதனம் ஒற்றுமையா?

உத்தம பத்தினி உன்னத சிற்பி நீ!

ஊக்கத்தை ஊட்டிடும் சக்தி நீ!

பத்தரை மாற்றுத் தங்கம்நீ சிங்கம் நீ!

பாருக்கு ஒளிதரும் பானு நீ!

மானிடம் வாழ்வதே மாதுவின்
அன்பால்!

சேர்ந்தவர் சிறப்பரே சிற்பியெம்
தாயால்!

காலம் பகைத்தாலும் காப்பாள் எம்
அன்னை.

நாளும் வணங்குவோம் நாவாரப்
பாடுவோம்.?

திருமதி.பரீதா. இராசவிசாகன்
கொக்குவில் கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்ணில் மகளிர் மாண்பு

பேரண்டம் போற்றிவிடும்
பெண்ணினத்தின் பெருமையினை
என்னவென்று நானுரைப்பேன்
எண்ணிச்சொல்ல முடிந்திடுமோ?
அவளின்றி இயங்காது
அகிலத்தில் ஓரணுவும்....
தாயெனவும் மகளெனவும்
தாயெனவும் விளங்குபவளே...
எத்திசையும் புகழ்மணக்கும்
என்றுமுந்தன் செயல்திறனால்
உள்ளத்தின் வலிமையினால்
உருப்பெற்ற தேவதையே.....
கண்டெடுத்த முத்தெனவே

காண்போர் நினைத்து விட்டால்
பண்பாடு பாரம்பரியம்
பாரினிலே சிறந்திடுமே.....
இல்லறத்தின் ஒளிவிளக்காய்
இன்புறும் வேளைதனில்
ஆயிரம் பணிகளையே
ஆக்கிரமித்துச் செய்கிறாய்
காற்றலையால் வீசிவிட்ட
கடலலையாய் நீயிருக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின்றி வாழ்வில் ஒரு
பெருமை மிகு அர்த்தமுண்டோ
புத்தியதில் ஆசானாய்
புன்னகைத்து விளங்கிடும்
மங்கையவள் அறிவிற்கு
மாலைகள் சூடிடுவோம்
ஆளுமையின் திறனதினால்
அகிலமதை ஆட்சிசெய்கிறாய்
திட்டவட்டமாய் பேசிவிட்டு
திக்குமுக்காட வைத்திடுவாய்
அறிவுச்சுடர் நீயெனவே
அகிலத்தில் விளக்கேற்றுகிறாய்





உயிரதனை பணயம் வைத்து
உடலதனால் ஒருமித்தது
பத்துதிங்கள் சுமக்கிறாள்
பாரமேதும் பார்க்காமல்
அன்பென்ற சொல்லதனை
அன்னையிடம் கற்க வேண்டும்!
விதைத்துவிட்ட நேசங்கள்
விளைச்சலுக்கு வந்திடவே
பகைமையதும் பயந்தோடும்
பாராட்டும் பெற்றுவிடும்!
மங்கையரின் சாதனைகள்
மண்புகழ வேண்டிடவே
நெஞ்சார வாழ்த்துகளைநேசங்கொண்டு
வழங்கிடுவோம்

மல்லிகா சக்தி தேவி, அரியலூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீறு கொண்டெழுந்திடு!



ஓ மகனே!

இன்னும் நீவிழிக்கலையா?

அந்தோ நடுநிசியில்

யாரோ ஒருவன் உன்

வீட்டுக் கூரையில் சொருகியதீ

அயற்கூரைக்குப் பாய்ந்து

சமுதாயமே எரிந்து கொண்டிருக்கிறது.

அதனுள் நீ உறங்கிக் கிடக்கின்றாய்.

வீரமகனே!

அத் தீயை அணைத்திட

வீறுகொண்டெழுந்திடு

.உன்னை மறந்துநீ

உறங்கிய நடுநிசியில்

காற்றோடு கலந்துவந்த

சேதியை அறிந்திலையோ?

நேற்றையநாள் நடுநிசியில்

கொட்டிக்கிடந்த மையிருளில்

தாயொத்த பெண்ணைத்

தாரமாக்கிய பின்

கோயில் தெருவில்

வீசிவிட்டுப் போய்விட்டான்.

இன்று தூங்கி எழும் வேளையிலே

மறுபடியும் ஓர்செய்தி.

சிலநாளாய்த் தோட்டத்தில்

அரும்பாய், மொட்டாய்ப்பின்

மலராய் மலர்ந்திருந்த பூவொன்றை

தோட்டக்காரன் அறியாமலே

கவர்ந்துசென்ற ஒருவன்

கசக்கி அந்தமலரினைக்

கிணற்றிலே வீசிவிட்டான்.

அவனும் ஓர் தாய்பிள்ளை,.

தாய்ப்பாலுண்ட கோழை.

தாய்போன்ற ஒருபெண்ணைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரமாக்கிப்பின் –
தரணியில் வாழவந்த தங்கையையும்
தாரமாக்கிக் கொன்றுவிட்டான். – தன்
கோழைத் தனத்தைப் பெண்ணிடம்
காட்டிவிட்டான்.
அதுவும் நடுநிசியில், கைகளையும்,
கால்களையும் கட்டிவிட்டு....
பிறந்தவுடன்
அவன்முகத்தைப் பார்க்கமுந்தி
பிஞ்சுக்கால் இடுக்கினுள்
ஆண் குறியைக் கண்டு
அக மகிழ்ந்திருப்பாள் அவன் தாய்.
அதனை ஆயுதமாக்குவான்
என்றே அறிந்திருந்தால்
கருவிலே அழிக்காவிட்டாலும்
குழந்தையாய் இருந்தஅவன்
குறியினைச் சிதைத்திருப்பாள்.
ஆணெல்லாம் கற்பைவிட்டுத்
தவறுசெய்தால்
அப்போதே பெண்மையும்
கற் பழிந்திடாதோ???
பாரதிதன் பாட்டினிலே நவிலக்கேட்டாய்
படைத்திடுவாய் புதுஉலகம்
பெண்களுக்காய்.
பாலுண்டு தாய்மடிமேல்
புரண்டெழுந்தாய்,
தங்கையுடன் உடன்பிறந்து



தமையனானாய்.
தமக்கையுடன் விளையாடி
அகமகிழ்ந்தாய்
தரணியில் நீ எதிர்பார்க்கும்
தாரமும் பெண்தான்.
வீட்டினுள்நீ நன்றாகத்
துயிலுகின்றாய்
றோட்டினிலே துயிலுகிறாள்
பிணமாய் உன்தாய்.
வீர மகனே,
தாய்க் குலத்தைக் காத்திடநீ
வீறுகொண்டெழுந்திடு.
அன்றேல்
உன் வீறாப்பைப்
பெண்மேல் காட்டாமல் இருந்திடு.

க. கனகதுர்க்கா
2013 (2ம் வருடம்)
பேராதனைப் பல்கலைக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணே உன்னால் முடியும்

இயற்கையின் அற்புதம் நீ,
இமயத்தின் பனித்துளி நீ.
இவ்வுலகை தாங்கும் பெண்மை,
நீயின்றி ஆணில்லை,

காதலில்லை கருவில்லை,
உயிரில்லை இவ்வுலகில,
மாபெரும் வளர்ச்சியில்லை,
பெரும் தகமை பெற்ற பெண்ணே

மண்ணாகத் தாங்குபவள் மலராகக்
குலுங்குபவள்
மரமாக வளர்ந்தவள்
நீ மலையாக நிமிர்ந்தவள் நீ,

உயிாகளைத்தருபவள் நீ,
உணவு தந்து காப்பவள் நீ,
அன்னையாய்
அணைப்பவள் நீ,
ஆதரவின் அடித்தளம் நீ.

உலகதிர அசைந்தாலும்
உறுதியாக நிற்பவள் நீ.
சரித்தரத்தைத் திருப்பிப்பார்,
பெண் தகமை தந்ததவள் நீ.

உன் பெருமை தெரிந்தவர்கள்
உயர்த்தி வைப்பார் இமயத்தில்,
இல்லையெனில் வருந்தாதே,
எதிர்காலம் பதில் சொல்லும்.

நடந்த வழி திருப்பிப்பார், நல்லதொரு
பாடம் தரும்.
எதிர்காலம் உன்னடியில்,
உன்வலிமை உயர்வைத்தரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்கள் எழுத்தில்
அல்ல, அது எண்ணத்தின்
செயற்திறனாம்.
ஏடுகளில் இருப்பவற்றில் எடுத்துக்கொள்
தேவைகளை......

நாளையது உனதுலகம்,
நம்பிக்கொள் உன் பலத்தை,
ஊழை என்று எண்ணாதே,
கொள்ளைச் செல்வம் உன் மனதே,

நிமிர்ந்து நின்று பதில் சொல்,
நேர்மைக்கு வலிமையுண்டு.
நிமிடத்தை கணித்துக்கொள்,
விரைவாகப் படித்துக்கொள்





மறக்காதே உன் தகைமை,
பாரெங்கும் புகழ் பெறுவாய்:
புறம் சொல்லும் உலகத்தைப்
புறக்கணிக்கப் பழகிக் கொள்

திறமையுடன் முன்னேறு, சிறந்த
வெளி முன்தெரியும்
பரந்த நிலை சக்தியுடன்
உயர் பெண்ணாகத் திகழ்ந்திடுவாய்.....

**இராஜேஸ்வரி.பாலசுப்பிரமணியம்,**

**லண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# பின் தொடர்வீர் பெண்களே..

பின்தொடர்வீர் பெண்களே
புதுப்பொழிவுடன் முன்
செல்வீரே...கண்களே!
சமுதாய மாதர்களே
பொதுக்கொள்கையுடன்
முன்னோக்கிச்செல்வீரே!

பண்புடையார் பெண்டிர்
பலமுடைர் என்பீர்......மழலை பெற்றே
மதிப்புடையார் நீவீர்...

கழிப்படையும் கணவனும் நீங்களும்
ஒன்றுபடல் உயிரின் வியப்பே சிறப்பே!
பாரதி புகழ்ந்த பார் புகழ் சுந்தரிகள்
நம்மூர் வளர்க்கும் அன்னையர்
அவர்களல்லோ இன்று....

செத்தைகள் பற்றைகள் செழிப்புறக்
கைதேய்ந்து...
மாட்டுத் தொழுவங்கள் பட்டிகள்..
உயர் உழைத்த கணக்கிலில்லா
கைகளே... காப்புகளே
நீங்களும் தொழிலாளர்
தலைவிகளெல்லோ...

பார்வளர்ந்த பல அம்மையர்... ஊரில்
உயர்வடைய..............

முகாமைத்துவம் பல செய்துயர்த்திய ...
செல்விகள் சேவகர் நீங்களன்றோ...
குழந்தைகள் குமரிகள் மகளிரென்று....
பல மனையவள் பெற்ற மாற்றமெல்லாம்
காற்றுடன்
போகாதே ஞானப்பெண்ணே!

கூட்டத்தில் ஒரு குறவன் பாடி வைப்பான்
அதன் நாட்டத்தில் சிலரே ஆடி நிற்பார்...
இவைகள் உன் தன் புகழில் நகைப்பாய்
வருமோ அன்புச் செல்வம்..............
தூய உந்தன் சொல்லதுவே தேயாது
அழகின் சுவையதுவே தீட்டது பொய்யின்
சொல்லதுவே...
பாலர் பாட்டின் கருத்ததுவே.........
நேரிய பாதையில் செல்வோமே ...
நியதியின் கண்களைக் காப்போமே..!
பாரின் கண்களைத் திறப்போமே..
பல காவிய நாயகிபோல் இலக்கியம்
படைப்போமே!! தீயவள் தூயவள்
இனி இங்கில்லை ஞானத்தின்
கண்களின் ஒளி நீயே...

அகசை பிறேம்சங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சவால்கள் தானே சந்தித்து விடலாம்



பிறந்ததும் சவால்
பிறப்புருவாக்குவதும் சவால்
வளர்ந்ததும் சவால்
வளர்த்தெடுப்பதும் சவால்
படிப்பதும் சவால்
படிப்பிப்பதும் சவால்
வேலை செய்வதும் சவால்
வேலை செய்விப்பதும் சவால்
ஏந்த சவாலை விட்டெறிந்தாய்
அனைத்தையும் தலைமேற் கொண்டாய்
பழிச்சொற்களும் உனதே
எனக்கொண்டாய்
மலையேயானாலும் தலையே சுமந்தாய்
மறு ஜென்மம் என அறிந்தும்
பிறப்புருவாக்க பின் நிறகாவள்
எதிலும் சரிநிகர் என சாதித்தவள் நீ
சரிநிகர் அல்ல மேன்மையானவள் நீ
விண்ணுயரப் பறக்கவில்லையா?
போர்கள் புரிந்து வெல்லவில்லையா?
சங்ககாலமென்ன கலியுககாலமென்ன
சரித்திரம் பெண் புகழ்
சொல்லவில்லையா?
பெண்ணே சவால்கள்தானே
துணிந்துவிடு சந்தித்து விடலாம்
தற்கொலை எனும் சொல்லை மறந்துவிடு
எதையும் தாண்டி சென்றுவிடலாம்
வென்று வரலாம்.

தர்ஷிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுமையெல்லாம் தாங்குபவள்

சுமையெல்லாம் தான்தாங்கி
சுகந்தத்தைத் தொலைத்து
நேரமெலாம் தன்குடும்ப நேர்த்திக்
பாடுபடும்

தனக்கென வாழாத
தரணியின் தேவதை
பின்தூங்கி முன்னெழுத்து
பிரியமுடன் சேவையாற்றி

உறவுகள் பேணிடும்
உரிமையின் தாயிவள்
பிரதிபலன் பார்க்காத
பிரபஞ்சத்தின் விடிவெள்ளி

வன்முறைகள் தாங்கியும்
வாஞ்சையுடன் வலம்வரும்
வானத்து விண்மீன்
வாழ்க்கைக்கு வழிகாட்டி

பண்பாடு பாரம்பரியம்
பாங்குடன் பாதுகாத்து
பரம்பரைக்குக் கையளிக்கும்
பண்பாட்டுச் சிற்பி

பதின்ம வயதில் பாதைமாறாது
பாலர்களைப் பக்குவமாய்ப்
பரிவுடன் பாதுகாக்கும்
பாசத்தின் தாயிவள்

விண்ணில் பறந்து
வித்தைகள் செய்பவள்
அறிவியல் உலகில்
அளவற்ற சக்தியிவள்

ஆதிக்க வெறியர்களின் அடிவருடித்
தனத்தையெல்லாம்
அஞ்சாது துணிந்துநின்றே
அழிக்கும் அகிலாண்ட நாயகி

பிரபஞ்ச சக்தியாய்
பிரியமுள்ள இல்லாளாய்
பரிவுடன் பாதுகாக்கும்
பாசத்தின் பார்விளக்கு


**கோபிஷா உதயகுமார்**
**செங்குந்தா வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதி(வி)யும் மாறல

பெண்மை எனும் அழகிய
வீணையிங்கு பெரும்பாடு
படுகின்றது சிலரால் வீணேயிங்கு
பொட்டப்பிள்ளையா கேள்வி
ஏனோ பிறக்குதிங்கு
பொறுப்பாய் வளரனும்
பிரிவினைச் சோதனையிங்கு
நடக்கையில் ஆயிரம் குற்றக்
கதைகளிங்கு
நளினமாய்ச் சொல்வர் கலங்கிய
நதிகளென்று
சீதனம் வாங்கிச் சிரிப்பையும்
பறித்திங்கு
சீதேவியில்லா முகமெனச்
சீண்டுவர் மறித்திங்கு
முதிர்கன்னியாக சமூகத்தில்
முத்திரை பதித்திங்கு
முனகிடச் சொல்வர் கதைகள்
படைத்திங்கு கணவன் மரணிக்க
விதவையெனும் பட்டமிங்கு
கட்டியவன் கைவிட
வாழாவெட்டியிவள் தட்டுமிங்கு
பிஞ்சுகளா குமரிகளா கிழவிகளா
பார்ப்பதெங்கு



பிய்த்து உண்ணக் காத்திருக்கும்
கழுகுகளிங்கு
பாரினில் சுதந்திரம் வார்த்தைகளால்
பாவையருக்கு
பா(வி)தியும் மாறல பதிலென்ன
தெரியுமா யாருக்கிங்கு

**ந. தாமரைச் செல்வி**
**இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழித்தெழு பெண்ணே!

சாதனைப் பெண்ணாய் சரித்திரம்
படைக்கவே வேதனையோடு
வெற்றி காண
வெடித்து நிற்பவள்
துடிக்கும் நெஞ்சத்தில்
இருளும் அகன்றிட பெண்மை போற்றிட
எத்தனை காவியம்
வரலாறு கூறும்
சரித்திரப் பெண்கள்
அடுப்பங்கரையை ஆண்டது போதும்
அடிமை உடைத்து
அகிலம் வெல்லவே......
மென்மை கொண்ட
நெஞ்சம் நிமிர்ந்திடும்
அன்பும் பாசமும்
காலத்தைக் கலைத்திடும்
நேரத்தை வென்று நேர்த்தியாய்
வாழ்ந்திடு!
விண்ணிலே விளக்கேற்றி......
இருளை அகற்றிடு மண்ணிலே
மண்ணிலே பிறப்பெடுத்த
மகத்துவம் நீயென...........
சமூகத்தின் போர்வையை நீக்கி எழுந்திடு!
உறவுகள் உதாசீனம் மௌனத்தால்



உடைத்திடு!
எடுத்திடு பார்வையால்
மேனியை வருடும் கயவனை
அறிவினை ஆயுதமாய் கையிலே
விழியாலே எரித்து சாம்பலாக்கிடு

அத்தனை வலிகளும்
வழியாய்த் திறந்திட
மொத்த உலகமும் உன் பெயர்
சொல்லிடும் பெண்மை போற்றவே
ஆண்மையும் உயர்ந்திடும்........

சுலக்சனா சுபாசங்கர்
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னலை இரசி

யாதுமறியா பேதையாய் .....
துள்ளித்திரியும் பருவமதில்
பெதும்பையாய்.....
காற்றின்றிய புல்லாங்குழலுக்கு
தென்றலாய்.... பெற்றெடுத்த
தாய்க்கு ஒரு பொக்கிசமாய்.....
இன்னல் பல சுமக்கத் தகு
சுமைதாங்கியாய்.....
கருத்தற்ற சமூகத்திற்கு ஓர்
எடுத்துக்காட்டாய்......
மனம் திறந்து வலு வீணையே மீட்டாய்
வலுவிழந்த மனிதர்கள் நரம்பற்ற
நாக்கொண்டு....
உன்னை வீழ்த்த நீயேன் எழ மாட்டாய்..
நரம்புள்ள வீணையை நாதத்துடன்
மீட்டாயோ....
துணையேதுமின்றி நிற்பாய் தலை
நிமிர்ந்து..
மாயை சூழ்ந்த உலகு தன்னில்....
எதிர்க்கும் பல மடையர் மத்தியில்...



மடமைத்தனத்தை
எதிர்க்கும் சஞ்சீவியாய்.....
இன்னல் கடந்து செல்லும் மாதர்
வாழ்வின் இலட்சியம் அதை
அடைந்து நிற்பர்...

சாம்பவி ஸ்ரீஅழகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் எனும் குத்துவிளக்கு...

கர்ப்பத்தின் வலிகளை
மற்றவர் அறியார்
கலங்காது சுமந்து
கண்ணீரால்....... மறைத்து
பெற்றெடுத்த பிள்ளை
பெண்ணோ ஆணோவென
பேசிடும் பேச்சுக்கள்
பேதையவள் தாங்கிட
பூமிக்கு அவதரித்த புது
வெள்ளை நிலா தேவதையாம்
பெண்ணே தெரிந்திடு நீயும்......

பூவுலகிற்குக் கிடைத்த
புதுமலரும் பெண்ணே
புதுப்பொலிவாய் என்றும்
புகழோங்கச் செய்பவளும்
தானும் தன் சார்ந்தோரும்
தலைநிமிர்ந்து வாழ்ந்திடப்
பெரும் பங்கு வகிப்பவள்
பெண்ணென்பதில் பெருமை கொள்
அடிமை வாழ்விற்குள் அடங்கியே
கிடக்காது சுதந்திரமற்ற
வாழ்வினை சுக்குநூறாக்கி
எழுபவள்! தாயாய் தாரமாய்
தன்பணி செய்தே நல்லதோர்
சகோதரியும் நண்பியும்
பண்போடு மகளும் என்றுறவாகி
மாண்பை வளர்த்து மகிழ்வான
உலகுக்கு மகுடமும் பெண்ணே!

உறவுகள் உள்ளமதன்
உவப்பதை அறிந்து
உறுதுணை நிற்பதில்
உயரிய குணமே
மென்மையான மனமும்
மேலான குணமும்
சிந்தனையின் சிகரமும்
சிதறிடா எண்ணமும்
ஆணுக்குப் பெண்ணென
தூணாகி நின்று அகிலத்தில்
உயர்த்திட அவளது ஊக்கமும்
தன்சுகம் நினைக்கா மங்கையவள்
பெருமையை ஒளிரும் தீபமாய்
ஓங்கிடச் செய்திடுவோம்.

தயாளினி சிவநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்த்தம் கொள்ள முடியா ஆழம்

அவளது வரலாறுகள் மட்டும்
நீண்டு கொண்டே செல்கின்றன
எழுதப்படாதவைகளாக...
கணப்பொழுதும் ஓய்வின்றி,
அவளது ஒவ்வொரு நாட்களும்
கடந்து செல்கின்றன.
சமூகத்தில் பல்வேறு நிலவரங்களை
சந்திக்கும் அவள்
வெவ்வேறு காலகட்டத்தை பிறருக்காய்
அர்ப்பணிக்கின்றாள்.
ஒவ்வொரு அர்ப்பணிப்பிலும் அவள்
மீண்டும் பிறக்கின்றாள்.

அவளது ஒவ்வொரு பிறப்பும் நொடிய
பிறப்புக்களாக மாறுகின்றன
பிறப்பின் அர்த்தமும் இறப்பின் அர்த்தமும்
அவளால் அர்த்தம் கொள்கிறது.
ஒவ்வொரு பரிமாணத்திலும்
ஏராளமான அனுபவங்கள்
சில வெளிப்படுத்தப்படுகின்றன
சில அவளுக்குள்ளே புதை
கொண்டுள்ளன.

அவளின் எண்ணங்களும்
வெளிப்பாடுகளும் எண்ணற்றவை.
அவளின் உலகம் அர்த்தம் கொள்ள
முடியாத அகலங்களாலானவை.
உலகத்தின் மகாராணியாக தன்னை
வடிவமைத்துக் கொள்கின்றாள்
அவள் மட்டுமல்ல அவள் சார்ந்தோரும்
இன்புற்று வாழ வழி செய்கின்றாள்
அர்த்தங்களுக்கு பெயர்
அவளாகின்றாள் – ஆனால்
அவள் அர்த்தம் கொள்ள முடியா
ஆழமாகின்றாள்.
அர்த்தங்கள் அவளுக்காய் இன்றும்
ஆரவாரிக்கின்றன.

இ. சப்னா
வவுனியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணின் சாதனைகள்

தற்காத்து தான் கொண்டான் பேணி
தகை சான்ற சொற்காப்பான் பெண்
பழமையில் ஒதுங்கிய பெண்ணவள்
புதுமையில் நிமிர்த்திட்ட பிரகாசம்!

பெண்ணின் பெருமையினை எடுத்தியம்ப
பெண்ணியக்கவிவரிகள் போதாது
அச்சம்,மடம்,நாணம்,பயிர்ப்பு
அடக்கமாக கொண்டவள் பெண்ணே!




பயிர்ப்பு எனும் முன்னறிவு புகட்டி
பாங்கான பகலினை ஒளிர்வித்த
பெண்ணினம்
நாணலை ஒத்தவள் பெண் தன்
மானத்துடன் பொறுமை என்னும் நகை
பூண்டு
குவலயம் போற்றும் இதயங்கள்!

நிலாக்காட்டிச் சோறூட்டிய பெண்ணவள்
நிலா பார்க்க விண்ணேறிச்சென்றிட்டாள்
தாய்மை அது தங்கம்
நாம் அறிந்த தெய்வம் என
மங்கையவரை மாநிலத்தில் மதித்திடுக!

மே.வி.விஜயராணி
முல்லைத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணின் சுதந்திரம்



பெண்ணின் சுதந்திரம் பூமியில்
பிறந்தனள் பொற்கொடி பூவாய்
பேரழகாலே காரிகையவளும்
பூரிக்க வைத்தாள்
எண்ணிலாத் துன்பங்கள் ஏற்றனள்
வாழ்வில் படிப்படியாகவே சுமந்தனள்
பாரினில் துன்பம் மண்ணிற்கும்
மாந்தர்க்கும் வேண்டிய விடுதலை
பெண்ணிற்கும் வேண்டுமே
புரிந்திடுவோம் நாமே
அந்நியர் வந்து அடிமை கொண்டாரோ
எம்மவர் நாமே கொடுத்தோம்
விலங்கினை
கொற்றவை அவளும் பெற்றனள்
பதவிகள் நானிலம் அறியவே பறந்தனள்
வானில்
நீதித் துறையிலும் நிமிர்ந்தனள்
சாதனை செய்தனள்
கண்களைப் போலவே பெண்களைப்
போற்றுவோம்
எத்தனை விடுதலை கொண்டனள்
இதுவரை
ஆயினும் அவளும் ஆகவில்லை
சுதந்திரம்.

திருமதி.யோ. யேசு யுயேனியன்,
உதயநகர்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடியல்

பெண்ணே!

பூட்டிய கதவின்
பூட்டுக்கள் உடையட்டும் புறப்பட்டு வா வெளியே!

பாரதி கண்ட புதுமையின் சின்னமே!

உண்மைகள் வேர்கொண்டு உரிமைகள் உயிர்பெறவே

அரசாள்வோம் வா வெளியே!

பூவையே! பரிதவிக்கும் பாருலகின்

நிலை மாற்றும் பணியில்

பூவும் புயலானால் தவறொன்றும் இல்லை

துயரங்களின் துவம்சத்தில்

புனிதங்கள் கொஞ்சம் புவனியில் மலரட்டும்

புதுமகளாய் நீ புறப்பட்டு வா வெளியே!

அன்புக்கு மட்டுமே அடிமையாய் நாமிருப்போம்

பண்பை விலைகூறி விற்கும் பாவச்செயல் கண்டு

சுடர் விழி திறந்து சுட்டெரிப்போம் அராஜகத்தை

அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு என்றார்



அன்று மண்ணுக்குள்ளே சில மூடர்

இன்று விண்ணேறிச்சென்று சாதனைப்பெண்களாய்

விந்தைகள் ஆய்ந்து விருதுகள் பெறுகிறோம்

பூவையர் எங்கள் கல்வி வெறும் பெருமைக்கு மட்டுமல்ல


பாவையர் எங்கள் பண்பான கல்வியே

பழுதுகள் ஏதுமின்றி பாருலகைக் காத்து நிற்கும்

ஏதங்கள் ஏதுமற்ற சன்மார்க்க சமூகத்தைப் பூவுலகில் பிறக்க வைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாவையே! ஆடையின் அளவை(க்)
குறைப்பதல்ல உண்மையில் நாகரிகம்
நானிலமே உன்னால் மறுமலர்ச்சி
காணவேண்டும்
அதுதானடி உண்மையில் உயர்வான
நாகரிகம்

பெண்ணினமே!தங்கத்திலும் தரமானது
இவையென்று கொள்வோம்
குறையாத பாசம் நிறைவான பண்பு,
நடத்தையில் புனிதம் புன்னகைக்கும்
வதனம்
வார்த்தையில் சத்தியம் புத்தாக்க
சிந்தனை
கொள்கை வழுவாது வெல்லும் வரை
வீரமாய்ப் பற்றி நிற்கும் மாறாத மனவுறுதி
இந்நகைகள் அத்தனையும் அழகாய் நாம்
பூண்டு
உயிர்கொண்ட சமுதாயம் உருவாகி
மலர்ந்திடவே

புனிதமான பூமியொன்றைப் பிரசவிக்கும்
தாயாவோம்புல்லர்கள் கூட்டத்தால்
செல்லரிக்கும் பூமியிலே
பூமியின் புத்துயிர் பெண்ணினமே
நம்கையில்
சுட்டெரிக்கும் சூரியனைக் கூட
எட்டி நின்று தொட்டுவிட எங்களால்
முடியும்
விளக்கைச்சுற்றும் விட்டில்களல்ல
நிச்சயம் நாங்கள் பீனிக்ஸ் பறவைகளே
ஆதலால்.....சாம்பலின் மீதிருந்தும்
மீண்டும் மீண்டும் உன்னதமாய்
உயிர்த்தெழுவோம்
எட்டத்தில் தெரியும் விடியல்
கிட்டத்தில் வந்தெம் கரங்களில்
சேரும்வரை

யாழ்கவி
கவிநா சசிகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்




மனிதகுலத்தின்
வழிகாட்டி நீ.........
மழலை மொழியால் மனதில் புகுந்து
இனம்புரியா மகிழ்ச்சி தருவாள்!
தாத்தாவின் தோளில் அமர்ந்து
உலகம் கண்டு
கை கொட்டி சிரித்திடுவாள்!
தந்தையின் கரம்பிடித்து
கல்விச்சாலை சென்றிடுவாள்
ஆறுவது சினம் என்று
தந்தைக்கும் ஆத்திசூடி
கற்றுக்கொடுப்பாள்!
மணவாழ்வில் அடியெடுத்து



மங்கையவள் வைத்திடவே
தணியாத தாகத்தால்
தன்னில்லம் பிரியுமுன்னே
அகவாழ்வின் அறத்தினை
அன்பொழுக கற்றிடுவாள்!
தாய் வீட்டில்
தனிசுகம் கண்டவள்
தான்புகுந்த வீட்டில்
தளர்வின்றிச் சுழன்றிடுவாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிழை செய்தபோதும்
பொறுமையாய் திருத்திடுவாள்!
தன்னிடம் இருப்பதை
இல்லார்க்கு ஈர்நதிடுவாள்
பொன்னும் தோற்றிட
பொலிவுறுவாள் உதவியாலே!
பெண்ணே பேரறமே
மனிதகுலத்தின் வழிகாட்டி நீ!
என்பதில் ஐயமேது கண்ணே!

ஹெலன் இமாக்குலேற்

கருவைச் சுமக்கையிலே
கண்ணாகப் போற்றியதை
கவனமாக வளர்த்திடுவாள்
கருவறையின் புனிதம் காத்து!
உறக்கம் தொலைத்து
இன்பம் தவிர்த்து
உணவே மருந்தாக
உண்டிடுவாள் குழந்தைக்காய்!
காலங்கள் சென்றபின்னும்
தோலது சுருங்கினும்
சுருங்காத மனங்கொண்டு
விரித்திடுவாள் பாசத்தை!
கணவனையும் குழந்தையாய்
கண்டிடுவாள் கருணையாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணே துணிந்துடு

தரணியிலே பூத்திட்ட
தாய்மையின் சின்னமே
தாயாய் மாறிய மாதர் குலமே

திடமெனம் உறுதியுடன்
தலை நிமிர்ந்து
துன்பத்தின் சுவடுதனை
அழித்திடப் புறப்படு

கலியுகத்தின் துயரதனை
சூட்சுமமாய் தாங்கி
காலத்தின் பிடியதனில்
சிக்கி விடாமல்
நவீன ராமர்களின்
பார்வை வலையில்
வீழ்ந்து அல்லல்
கொள்ளாமல் காத்துக் கொள்
வெட்கமெனும் ஆயுதத்தை
அரணாக்கிஆணாதிக்க சமூகத்தில்
துணிவு கொண்டு இவ்வையகம்
போற்றிட கச்சிதமாய் நடந்து



ஈருலகிலும் வெற்றி பெற நிமிர்ந்து நில்
உலகை நினைத்து கனவு காணாதே
உன் தன்னம்பிக்கைத் துடுப்பை
கைவிடாதே மானத்தை உயிரைப்
போற்றி உவகை கொண்டு உன்னையே
நீ ஆட்சி புரி அடிமைத் தளைக்குள்
அகப்பட்டு விடாதே அரசனே
வந்தாலும் மனதினை அடக்கிடு
மானமெனும்  என்னும் மந்திரத்தை
மாண்பு கொண்டு காத்து நில்

என்.எம். ஆரிபா ஏறாவூர்
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழுந்தது போதும் எழுந்து வா

அழுது அழுது
அகத்தைச் சிதைத்தாய் ....
அடிமை வாழ்வில்
அனைத்தும் இழந்தாய் ...
ஊமை மொழியில்
உறவைக் கலந்தாய் ...
தலையைக் கவிழ்ந்து
பாரம் ஏற்றி....
தன்னிலை இழந்து
சோரம் போற்றி ...
உரிமை உணர்வினை
காலடி தேற்றி ...
உலகில் நீயும்
உயிர் இழந்த உடலே ...
உன்னால் தானே
பரந்தது உலகம்...
உன்னால் தானே
உயர்ந்தது மனிதம் ...
உன்னால் தானே
வளர்ந்தது புனிதம் ...
உன்னால் தானே
மணந்தது ஆணினம்...
உன்னால் தானே
துணையின் இருப்பிடம் ....
ஆணையும் பெண்ணையும் பெற்றவள்
நீயே ....
ஆதரவு தந்து
வளர்ப்பவள் நீயே ...
நீ இன்றி பரவாது உலகு ....
நீ இன்றி வாழாது உலகு ...
பெருமை மிகு பெண்ணினமே ....
பெரு மதிப்பும் உன்னிடமே ....
உன்னை நீ
உணர்ந்து வா ...
உன்னில் உரத்தை
உணர்த்த வா ...

விழுந்து அழுந்தியது போதும் ...
எழுந்து உயர்ந்திட வா ....
ஏற்றம் கண்டிட வா ...
மாற்றம் கொண்டிட வா .....

கவியருவி மாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் தினம்



மகளிரின் பெயர் கொண்டிருக்கும்
திருநாள் அவர் விடிவிற்காய் மலரட்டும்
வியர்வைக்காய் பாடட்டும்
"அம்மா" என்று பெயரிட்டு
அவள் மடியில் உருவாகும் மாந்தரெல்லாம்
பெண் தெய்வம் என புகழ் பாடட்டும்

சமையல் கூடமே கதி ஆனவளாய்
ஊதாங்குழலால் அடுப்பூதும் இவர்களும்
துப்பாக்கி குழலால் போர் செய்ய
துணிந்தார்
எம் மண்ணுக்காக!

எம் வீட்டு விளக்காய் இருந்த பெண்ணே
ஏடெடுத்து படித்து நீ
நாட்டுக்கும் வெளிச்சம் வீசுகிறாயே
விண்வெளியும், கடல்வெளியும்
தேச எல்லைகளும் காப்பவளும்
பெண்ணவளே நீயவளே!

தந்தை என்றாலும் தனயன் என்றாலும்
தாங்கிடும் கைகள் பெண்களே!
பாசத்தைக் காட்டி நேசத்தை கூட்ட
அன்பினில் சிறந்தவர் பெண்களே!

கன்னிப்பெண், மணப்பெண்
குடும்பப் பெண், தாய்ப்பெண்
எத்தனை வேடங்கள் வாழ்வினில்
அத்தனை வேடங்கள் போட்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தனையும் முடிப்பவர் பெண்டிரே!
தோல்வியில் துவண்டதுமில்லை
வெற்றியில் தலைக்கனம் இல்லை
இல்லத்தை கோவிலாக்கினாள்
இன்பத்தை கருவாக்கினாள்
பூமியில் உருவாக்கினாள்.
உதிரத்தை பாலாக்கினாள்
துன்பத்தை தூக்கி வீசினாள்
கதிரவனாய்ப் பிரகாசித்தாள்.

தமிழ் இனமே!
மடியிருத்திய அன்னையை
வலுவான கைகளில் தாங்கிக்கொள்
குலவிளக்காய் ஒளி வீசும் மனைவியை
இதயக்கோவிலுக்குள் பூட்டி வை.
பெண் என்ற தாய்மைக்கு இணை
வேறெந்த சாதனை
தாய்மை உள்ளம் கொண்ட
ஒவ்வொரு பெண்ணும்
சாதனைப்பெண்ணே!

சாதனைகள் பல புரிந்தவளே
வேதனைகள் அற்றவளாய்....
சரித்திரத்தில் இடம்பெறுவாய்!
எம்சக்தி பெண்சக்தி பெரிதென்று
எதிர்வின்றி கை கோர்ப்போம்
வாரீரே!!

ஜெபா ஸ்ரீ
நெடுந்தீவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவள்

அவள் கண்கள் மூடியிருக்கும்
ஆனாலும் அவள் எப்போதும் விழித்திப்பாள்
அவள் செவிகள் தோள்மூட்டில் சாய்ந்திருக்கும்
ஆனாலும் அவள் குழந்தையின்
சிறுமுனகலுக்கும் செவி சாய்த்திருப்பாள்

அவளுடைய முழங்கை எப்போதும்
வளைந்திருக்கும்
அது அவளின் சமநிலைக்கு பெரிதும்
பாடுபட்டுக் கொண்ருக்கும்
அதுவே அவளுக்கு வலித்திருக்கும்
ஆனாலும் அவள் மழலைக்கு
அணையாக இருப்பாள்

அவளுடைய முள்ளந்தண்டு தனியே
வளைந்தும் இல்லாமல்
நேராக நிமிர்ந்தும் நிமிர்ந்தும் நில்லாமல்
ஒருதலைகீழ் கேள்விக்குறியைப் போலொரு
விசித்திர வடிவில் இருக்கும்
ஆனாலும் அவள் அசைய முற்படாது
தன்னிலை பேணுவாள்



ஒவ்வொரு இரவுகளும் அவளுக்கு
இன்னொரு பகல்களே ஆகும்
இதே கதைகள் அன்றாடம் அவள்
தொடர் கதைகளாகும்
இதையறியாத கணவன் மட்டும்
தனியறையில் துயில் கொள்ள
அவள் மட்டும் அடுத்த பகலின்
பகல்வேலைகளையும் இயிடையே
பட்டியல் போட்டுக்கொண்டிருப்பாள்
அவள் விழிகள்தான் மூடியிருக்கும்
ஆனால் எப்போதும் அவள்
உறங்கியதே இல்லை....

தோழி கவிதாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கையரைப் போற்றுவோம்

பெண்ணின் நெஞ்சம் பெருமை
கொண்டிட மண்ணிலே வாழ்கின்ற
மங்கையரைப் போற்றுவோம்
மகளிரை வாழ்த்தும் மகத்தான
தினமதிலே மாண்புற வாழ்ந்திட
மனமகிழ வாழ்த்துவோம்

தாயாய் தாரமாய் மங்கையாய்
மகளிராய் தன்னிகரில்லாத்
தேவதைகள் வாழ்ந்த பூமியிது
வீரத்தின் விளைநிலமாய் வீரமொடு
வாழ்ந்த வீர காவியங்கள் வழிகாட்டி
நிற்கிறது

ஆணுக்குப் பெண் சளைத்தவள்
பெண்ணல்ல அறுசுவை படைத்து
ஆதரவாய் அணைத்து அன்புடனே
சேவை செய்யும் அடியாள்
அவளல்ல உணர்ந்திட வைப்பதே
இந்நாள்! போகப் பொருளாய்
பார்க்கும் காடையர் கற்பில் சிறந்த
கண்ணகியை மறந்தாரோ வீரத்தின்
விதையாம் வேலுநாச்சி எங்கே
வாழ்ந்து காட்டிய மாதராம் மங்கையர்
நாகரீக உலகில் வதைபடும்
பெண்கள்! நாளாந்தம் கிடைக்கும்
நாளிதழ் செய்திகள் மூடரின்
கைகளில் சிக்கிய மழலைகள்
முப்பாட்டன் காலத்தில் இல்லாத
வன்மங்கள்

பெண்கள் இல்லையேல் வம்சம்
இல்லையே! பாழான உலகில் மனித
இனமில்லை புரிந்திடு மனிதா
புத்தியை வளர்த்திடு போற்றி
வணங்கி பாதம் பணிந்திடு

புவனா சற்குணம்
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழித்தெழு பெண்ணே

மங்கை என்பவள் மலர் போன்றவள்
அவளை மதிக்க கற்றுக்கொள் மானிடா
மானிடன் இந்த மண்ணில் வருவதற்கு
வழியானவள் மங்கை
வீரப் பெண்கள் வாழ்ந்த
தூயமண்ணில் பெண்ணவளே
பெரும்சக்தி அடுப்பூதும் பெண்களுக்கு
படிப்பு எதற்கு
என்று முடக்கி வைத்தான்
என்றொரு காலம்
பெண்ணே சமைப்பதும் துவைப்பதும்
மட்டுமல்ல உன்பணிகள் சரித்திரம்
படைத்து ஆளப் பிறந்தது

பெண்ணினமே
கலங்காதே பெண்ணே காலங்கள்
மாறும் அடிமை வாழ்க்கை வாழ்ந்தது
போதும் துணிந்து நில் துயரங்கள் ஓடும்



வீரம் விளைந்த மண்ணிலேயே
நானும் பிறந்தேன் எனக்குள்ளும்
இருக்கிறது வீரம் ஆளப் பிறந்தது
பெண்ணினம் எனப் பெருமை
கொண்டு வீரவேங்கையாய்
விழித்தெழு பெண்ணே
இவ்வுலகின் பெண் அடிமைத்தனத்தை
ஒழிப்போம்...

ரஜனி உதயசேகரன்
இங்கிலாந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வென்றதா பெண்ணியம்

விண்ணைத்தாண்டி விந்தைகள்
செய்தாள்
மண்ணைத் தோண்டி தொல்லியம் கண்டாள்
விஞ்ஞானத்தோடு விளையாடி
விஞ்ஞானியும் ஆகினாள்

அடுப்படியே கதியென்று இல்லாமல்
அரியணையிலும் அமர்ந்தாள்
பாரதி கண்ட புதுமைப் பெண்
எனப் பெரும் புகழும் பெற்றாள்

சமத்துவத்தையும் வென்றாள் வாழ்வின்
சங்கடத்தையும் தீர்த்தாள்
இல்லாள் இல்லையென்றால்
இங்கு பெண்ணியம் வென்றதா?

பிஞ்சுப் பாலகியாய் இருந்தாலும்
பிடிக்கிறது மாற்றானுக்கு
பெண்ணின் அங்கம் தன்னை
படம் பிடித்துப் பணமாக்குகின்றான்
மற்றொருவன் ஒவ்வொரு பெண்ணும்
நாளைய தாய் என்பதை மறக்கிறான்
சாதிக்கும் பெண்ணை முடக்குகிறான்
பெண்ணியம் வென்றதா?

பிஞ்சுப் பாலகியாய் இருந்தாலும்
பிடிக்கிறது மாற்றானுக்கு
பெண்ணின் அங்கம் தனை
படம் பிடித்துப் பணமாக்குகிறான்
மற்றொருவன்

ஒவ்வொரு பெண்ணும் நாளைய தாய்
என்பதை மறக்கிறான்
சாதிக்கும் பெண்ணை
முடமாக்குகிறான்.

ஒவ்வொரு ஆண் பிள்ளைகளுக்கும்
சொல்லிக் கொடுங்கள் பெண்
என்பவள் யார் என்று...
அன்று பெண்ணியம் வெல்லும்.


திருமதி தனப்பிரியா லக்ஷ்மன் கேதீஸ்
ஆசிரியர்
யா/திருக்கும்ப கன்னியர் மடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமையின் பிறப்பிடம்

ஆளுமையின் பிறப்பிடம் நீ
பாரதி ஏட்டில் – அன்று
பாடினான் பெண்விடுதலை – பாரே
வியந்திட விந்தைபுரிந்திடும்
வீரப்பெண்களின் சாதனையின்று....!

பெருமையாய் உயர்ந்த
பெண்மையும் மென்மையென்று
அடிமை விலங்குபூட்டி – நம்
ஆளுமை பறித்தது
மதியிழந்து வாழும் மடமை சமூகம்...!

பக்குவமாய் வளர்த்து
படுக்கையறையும் அடுப்பங்கரை யும் –
பெண்
அடையாளம் என்றுரைத்து
அலங்கரித்து மணமேடை
அனுப்பிய காலமிருண்டதே – பெண்மை
அடிமைக்கோலம் பூண்டதே...!

சமத்துவம் தொலைத்த
சாதிய போக்கும்
சீதனக் கொடுமைகளும்
சீர்மிகு பொருத்தங்களும்
பொருத்தனையற்றவாழ்வுமாற
பொங்கியெழு துணிவோடு...!

அலங்காரமும் அவமானமும் உனது
அடையாளமல்ல
உலகாளு உன்னறிவாலே...!
உன்னுயர்வு கண்டு
செயலாலடிப்பார்
சொல்லாலடிப்பார்...!

கற்புக்கே கலங்கமாய்
காட்டேறிகள் வசைபரப்பி – நம்
நடத்தையில் கைவைப்பார்
நசுக்கியே மனங்கொள்வார்
துச்சமென எண்ணி
அச்சம்தவிர்த்துப் போராடு..!

மலரும் வாசம் உணரும் முன்னே
காமுகரால் கசங்கிய
பெண்மைக்காய் குரல்கொடுக்க
பொங்கிநீயும் எழுபெண்ணே...!

பூ கோளத்தின் புவியீர்ப்பு
விசைநீயன்றோ
ஆக்கமுறு சக்தியின்
ஆளுமை நமதன்றோ
சீர்மிகு சிந்தையால்
மாற்றம்காண்போம்
பெண்ணே விழித்திடு..!

**புனைபெயர் தமிழ்மொழி**
**இய. பெயர் நீக்கிலன் பரிமளரோஜினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடியலை நோக்கி

விடியலை நோக்கி
வீறுநடை போடு
துயரம் கூடத்
தூரமாய் போகும்

அன்பும் அமைதியும்
அகத்தில் அணிசெய்ய
நிறையும் நிம்மதி நிரந்தரமாய் கிடைக்கும்

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட
பார்வையுமாய்
நிமிர்ந்து துணிந்திடு
நீசர்களை விரட்டிடு

அறநெறி பின்பற்றிடு
அறியாமை அகற்றிடு
அடிமை விலங்கை
அடியோடு தகர்த்திடு

சாதிமத பேதமின்றி
சமத்துவம் பேணிடு
பால்நிலைச் சமத்துவம்
பாங்குடன் வளர்த்திடு

விஞ்ஞான யுகத்தில் விந்தைகள் புரிந்திடு
இளைய தலைமுறையை இனிதே வழிநடத்து

ஆணாதிக்கச் சக்திகளை
அடியோடு ஒழித்துவிடு

அகம்பாவங் கொண்டோரை
அறிவாலே அடக்கிவிடு

பாரதியின் கனவுகளை
பாங்குடனே நினைவாக்கிவிடு
மற்றவர் தருவதல்லஉரிமை
மன்றாடி நிற்காதே

அஞ்சியஞ்சி வாழ்ந்தது
அஞ்சுதமே போதும்
அன்புடன் அறிவை
ஆயுதமாக்கு அவனியில்

ஆதிக்கவாதிகளின் ஆட்டமடங்கும்
அமைதிகொள் பெண்ணே
ஆளுவாய் அகிலத்தை

வித்தகியே விரயமின்றி
வித்தைகள் கற்றிடு
விடியலை நோக்கி
வீறுநடை போட்டிடு

திருமதி.கஜலட்சுமி சயந்தறூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்மொழி கேள்

ஈராயிரத்து இருபத்து மூன்றில்
முதல் வருட பிரசவத்தில் அடடா....
எத்தனை பூரிப்பு, என் மனதில் ஏனிந்த
ஆர்ப்பரிப்பு!!
விளம்பும் என் பெண் மொழி கேள்
புலம்பும் உன் வாய்மொழி கொஞ்சம் பூட்டு !!

அகிலத்தின் ஒவ்வொரு அசைவிலும்
அனுவனுவாய் மகளீர்களின் இன்னோரன்ன
மகத்துவம் !
மண் மிளிரும் புன்னகையிலெல்லாம்......
பெண்ணவளின் பெருங்காவியம்!!

ஏட்டுச்சுரைக்காய்களாக கற்பனைக்கு
எட்டாமல் போன கரங்களெல்லாம்– இன்று
சாதனை சிற்பிகளாய்......
சரித்திரத்தையே செதுக்குகின்றன.!!

சமூகத்தின் தரித்திர தலைகளை எல்லாம்
சிரச்சேதம் செய்து புது வியாக்கியானம்
விளம்பும் சாதனைப் பெண்களை, பாருலகமே
பாராட்டிட மறுப்பாயோ??

அடுப்படி முதல் அண்டம் வரை.......
உலகைத் திரும்பிப் பார்க்க
வைக்கும் நல்ல கொலுசொலிகளின்
இசையை புல்லாங்குழலில்
மொழிபெயர்க்க புதுயுகமே
புறப்படாயோ??

சாம்பலில் இருந்து எழும் பீனிக்ஸ்
பறவையாய் சாதனை பெண்கள்,
சோதனைச் சாகரத்தின் சாளரம்
திறந்து சாரீரம் எழுப்பிய
மாட்சிமையாளரை மானுடமே........!
கவி கொண்டு வாழ்த்த
விரைவாயாக!!!

ஜெ.வித்யா தர்ஷினி
கொட்டகலை
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண்கள் நம் கண்கள்

பெண்ணியம் பேசலாமா
பெருமைகள் சொல்லலாமா;
விண்ணில் பறந்தாரே
வியத்தகு சாதனையாய் கண்முன்னே
கண்டோமே கல்பனா சாவ்லேயை

சுய உதவிக்குழு மேம்பாட்டில் பிரதமரே
வணங்கிய சின்னப் பிள்ளையைச்
சிந்தையில் மறந்தோமே
எல்லோரும் மாதார் குல
மாணிக்கங்கள்
உச்சமெனத் தொட்டாலும்
உயரமெனப்ப பறந்தாலும்
பெண்ணடிமை குறையவில்லை
பாலியல் பலாத்காரம் வன்முறை தொடராக
தொடர்தொல்லை வீடுகளில்

வெளியில் தொடர்கிறது
உறவுகளில் பணியிடத்தில்
அரங்கில் பல்வேறு
உருமாறிக் குத்திக் கிழிக்கிறது
தாம்பத்ய உறவிலும்
துவேசங்கள் தொடர்கிறது



கொலைவெறித்தாண்டவம்
கன்னியரும் இளம்பிஞ்சுகளும்
பொசுங்கி மடிகின்றார்
விடுதலை ஏட்டளவில்
ஓதுக்கீடு உதட்டளவில்
உயர்பதவி கொண்டவரும்
கொடுமையிலே கூத்தாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்க.... வெறிநாய்கள்
அடங்காத மோக வெறி
உயர்வு தாழ்வு ஒரு துளியும்
ஒருபோதும் மாறாது

விரவிக் கிடக்கும் வேற்றுமை
ஒழியட்டும்
மூச்சடங்கி முடங்கியே
மூளையிலே கிடக்காதே
முற்றாகப் புறந்தள்ள
முழுவீச்சாய் எழுந்திடுக
தாய்நாடு தாய்மொழி





பூமித்தாய் என்பதுவும்
வாய்ச் சொல்லில் வசப்படுமா ?
வாய்மைநெறி வளர்ந்திடுமா.?
பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய்
புறப்படுவாய்? எதிர்ப்படும்
தடைகளைத் தகர்த்தெறி?.

பெண்ணுரிமை எங்கள்
பிறப்புரிமை என்போம்
இனியும் அடக்கியாளும்
இழு நிலை வேண்டாமே
விடியலைக் கொண்டு வா
வெற்றியைப் பறித்திடு
இனியொரு சுதந்திரம்
பெண்களுக்காய் அமையட்டும்
பெண்ணியம் போற்றும்
பெண்மையைக் காப்போம்

கவிஞர் த.நவமணி
மணப்பாறை, திருச்சி மாவட்டம்
தமிழ்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதுமை பார்த்து முகம் சுளிக்காதே

"முதுமையின் வாசலில்
காத்து நிற்கிறேன்
முதலடி எடுத்து உள்ளே போக
முறுக்கு மீசை கொஞ்சம் தளருது
முழங்கால் மூட்டு வலிக்கத்
தொடங்குது"

"தள்ளாட்டம் என்னில்
வெள்ளோட்டம் பார்க்குது
தனிமை என்னை தேடி வருகுது
தத்துவம் போதிக்கும் பக்குவம்
வருகுது தலை மயிரும்
வெளுத்துப்போகுது"

"ஆடை மாற்றுகையில்
அவதிப்படுகின்றேன்
ஆகாரம் ஏதோ கொஞ்சம்
சமாளிக்கின்றேன்
ஆசை ஒன்றிலும் இல்லாமல்
தவிக்கின்றேன்
ஆத்திரம் அடக்கி அமைதியாய்
வாழ்கிறேன்"



"சாப்பிட எடுத்தால் கையும் நடுங்குது
சாகம் தெரியாமல் கீழே சிந்துது
சாந்தமான உன்முகம் ஏனோ சிவக்குது
சாபம் இடுகிறாய் பழசை மறந்து"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

"சாவு உன்னை காவாதோ
சாதாரணமாய் திட்டி விட்டுப்போகிறாய்
பாடம் சொல்லி பக்குவமாய் பார்த்து
பாசம் கொட்டி வளர்த்தது மறந்தாயோ"

"பொறுமை கொண்டு உன்னைப் புரிந்து
பொடியனாய் உன்னுடன் சேர்ந்து
விளையாடி பொய்கள் கூறி
நிலாவினைக்காட்டி
பொறுப்புடன் வளர்த்தது மறந்தாயோ?"





"உன்னைக் குளிக்க வைக்கப்பட்ட பாடு
உறங்க வைக்கச்சொல்லிய கதைகள்
உழைப்பு முழுவதும் சேர்க்காமல் தந்து
உயர வைத்தது முட்டாள் என்கிறாயா?"
முதுமை பார்த்து முகம் சுழிக்காதே....

புவனா சற்குணம்
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடியலைத் தேடி வீறுகொண்டெழு

விழித்தெழு பெண்ணே!
துடிப்புடன் துணிந்திடத்
துயரங்கள் பறந்திடுமே!
கவனமாய்த் தவமெனக்
கலைகளைப் பயின்றிடின்
அவனியில் வளமுனக்கு
அளவிலாது நிறைந்திடுமே!

அடுப்பூது! படிப்பெதற்கு,
அன்றுரைத்தார் நங்கையர்க்கு!
நடுவானிலே நடமாடியே
பணிபுரிவர் பாவையின்று!
தொடுவானமும் தூரமிலை
தொட்டிடலாம் திட்டமிடு!

புவனமதில் பூத்திடும்
புதுமைகளைப் புரிந்திடு
புத்தாக்க சிந்தனைகள்
வளர்த்திட வழியெடு!

பொன்னெனும் பொறுமையின்
சின்னமாய்த் திகழ்ந்தே!
நன்மைகள் சொரிந்திட
நானிலத்தில் நதியாகிடு!



தண்மதியாய்த் தரணியில்
தண்ணொளியைத் தந்திடு!
மண்மீதிலே சாதித்திட
மனவுறுதி எடுத்திடு!
பொல்லாரின் பொல்லாங்கைப்
புரிந்திட முனைந்திடு!
நல்லோரின் வார்த்தைகள்
நலம்பயக்கும் உணர்ந்திடு!

கிண்ணியா சபீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணிந்திடு பெண்ணே துயரம் அகலும்

கரிகாலத்தில் வாழும் காவியப்
பெண்களே.....
கவனம்!
கழுகுகள் பல கொத்துவதற்கு
காத்திருக்கு...!

அண்ணன் வேடத்திலும் மாமா
வேடத்திலும்....ஏன்!
தந்தை வேடத்திலும் தடம்மாறிப்
பலகழுகுகள் காத்திருக்கு....!
பச்சிளம் பாலகியெனக்கூட
பார்க்காத கூட்டம்
கண்ணே!
உடையிலும் கவனம்
பேச்சிலும் கவனம்
போகும் வழியிலும் கவனம்
குடிக்கும் பானத்திலும் கவனம்...!
பெண்ணே சற்றுச் சிந்தி!
அடுப்படியில் அடிவைத்து அன்றிரவு
உறங்கும் வரை
அயராது உழைத்து அடிமையாய்
வாழ்பவளே!
அயர்ந்து போய்விடாதே
ஆபத்துக் காத்திருக்கு....!


சுமைகளை தாங்கியே
சுதந்திரம் இன்றித் தவிப்பவளே....!
பூக்குமுன்பே கருகாகும்
பிள்ளைகள் நிலையைப் பார்...!
ஆண் என்ன பெண்ணென்னா
ஆண்டவன் படைப்பினிலே...!
எரித்துவிடும் நெரும்பின்பிழம்பு
உன்னுள் இருக்கும்
வரகுக்குள் இடிதாங்கும்
பொறுமையின் சின்னமே...!
பொறுத்தது போதும் பொங்கி
எழுந்திடு...!
மனபலம் தன்னிலே மணி
மனைபலம் செழிக்கும்....!
துணிந்திடு பெண்ணே துயரம்
அகலும்....!

சுதர்சினி சுபா
சண்டிலிப்பாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பில் பெண்களை வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் ஆசிய மன்றத்தின் அனுசரனையுடன் மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண்களை பால்நிலை வன்முறை தொடர்பில் வலுவூட்டல் என்னும் நிகழ்ச்சி திட்டத்தை நடை முறைபடுத்தி வருகிறது. இது யாழ்ப்பாணம் கிளிநொச்சி மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உள்ள பெண்களுக்கான பால்நிலை வன்முறை தொடர்பிலான சட்ட உதவி மற்றும் சட்டம் தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வுகள் அவர்களின் பொருளாதாரம் தொடர்பிலான சவால்கள் மற்றும் அவற்றை வலுவூட்டல் நிகழ்வுகள் திறன் அபிவிருத்தி கலந்துரையாடல்கள் போன்ற செயற்பாடுகள் இதன் மூலம் முன்னெடுக்கப்பட்டன .


எமது நிறுவனத்தால் மாங்குளப் பிரதேசத்தில் இயற்கை விவசாயத்தை முதன்மைப்படுத்தி விவசாயம் செய்யும் 10 குடும்பங்களை முன்னிலைப்படுத்தி அவர்களுக்கு விவசாய ஊக்குவிப்பினை செய்து வருகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உலக சமாதான தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் அமைதி பேரணி ஒன்று மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது . குறித்த அமைதிப் பேரணி யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்தில் ஆரம்பித்து நெடுந்தூர பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது.

இதன் போது பெண்கள் அமைப்பினர் பெண் பிரதிநிதிகள் மகளிர் அபிவிருத்தி குழுக்களின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.







பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கனடிய உயர்ஸ்தானிகர் மற்றும் ஆசிய மன்றத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் வட மாகாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்றை மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் கடந்த 14.02.2023 அன்று நடத்தினார் .இதில் பெண்கள் தொடர்பில பணியாற்றும் துறை சார்ந்த வல்லுனர்கள் பலரும் கலந்து கொண்டனர் தமது கருத்துகளை முன் வைத்தனர் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









பால்நிலை வன்முறைக்கு எதிரான வாரமும் மனித உரிமை தினமும் அனுட்டிப்பு பால்நிலை வன்முறைக்கு எதிரான வாரமும் மனித உரிமை நிகழ்வும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் கடந்த டிசம்பர் 10 2022 அன்று நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஷரூபாவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டனர். பாடசாலை ஆசிரியர்களுக்கான பால்நிலை வன்முறைகளுக்கான தீர்வுகள் என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. மகளிர் அபிவிருத்தி நிலைய நிர்வாக சபை உறுப்பினர்களால் விருந்தினர்களுக்கான நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.








பெண்களுக்கான பற்றிக் பயிற்சி நெறி மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் பெண்களுக்கான தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்வதுக்கும் சுய தொழில் அபிவிருத்தியையும் மையப் படுத்திக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பற்றிக் பயிற்சி கடந்த ஆண்டு நடை பெற்றது. இதில் 20 பெண்கள் கலந்து கொண்டு பற்றிக் கலை தொடர்பிலான பயிற்சியை பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்




சிறுவர்களின் உரிமையும் சிறுவர்களின் பாதுகாப்பு நடைமுறையும் பற்றிய இணைய வழி சான்றிதல் கற்கைநெறி



இயற்கை விவசாயம்



உலக சமாதான தினம்




பெண்களுக்கான பற்றிக் பயிற்சி நெறி

தீபம் பிறின்டேர்ஸ், கே.கே.எஸ்.வீதி, யாழ்.
077 250 6234

noolaham.org | aavanaham.org